1971 ஜூன் 24]

சேலம் உருக்காலை.

*40 வினா—திரு. கே. ஏ. வகாப் :

திரு. என். கே. பழனிச்சாமி :

டாக்டர் எச் வி ஹாண்டே : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சேலம் உருக்காலை சம்பந்தமாக தஸ்தூர் கம்பெனியின் தொழில் நுட்பப் பொருளாதார அறிக்கை அரசுக்குக் கிடைத்து விட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

*41 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சேலம் உருக்காலைக்காக 1970-ம் ஆண்டு முடிய ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எவ்வளவு? மேலும் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கும் நிலம் எவ்வளவு ?

(இ) இந்தத் திட்டத்தினால் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) 43.38 ஏக்கர். மேலும் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கும் நிலத்தின் அளவு பற்றி மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு இன்னும் இறுதி முடிவு வரவில்லை. இது சுமார் 4,370 ஏக்கர் இருக்கும் என்று தெரிகிறது.

(இ) இந்தத் திட்டத்தினால் சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது.

*42 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Union Government's orders have been received by the State Government for the formation of a Corporation to run the Salem Steel Plant; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

*43 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether iron ore rocks were blasted at Kanjamalai in Salem district about March 1970 for the second pilot mine; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: